**எகலியகொட பிரதேச சபை**

**இரத்தினபுரி மாவட்டம்**

-----------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

## 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 ஆகஸ்ட் 07 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 மே 12 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 செப்தெம்பர் 09 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

## 1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, எகலியகொட பிரதேச சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றல் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் சபைக்கு உரித்தான வங்கிக் கணக்கிற்கு உரித்தான காசேட்டின் படி, மேலதிகப் பற்று ரூபா 993,208 தொகையான போதிலும் இது ரூபா 979,598 ஆக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. இதன் காரணமாக நிதி நிலைமைக் கூற்றின் சமப்படுத்தல் நிலை கணக்காய்வின் போது சிக்கலாகக் காணப்பட்டது.

(ஆ) அவிசாவளை மற்றும் இரத்தினபுரி நீதவான் நீதிமன்றங்களால் 2012 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரை நீதிமன்றத் தண்டப்பண வருமானம் பெறவேண்டிய நிலையில் இருக்கையில் மீளாய்வாண்டின் போது நாட்குறிப்பின் மூலம் கூடுதலாகப் பட்டியலிடப்பட்டதாக ரூபா 563,249 தொகை திரண்ட நிதியத்தின் மூலம் பதிவழிக்கப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) 04 ஆயர்வேத நிலையங்களிற்கு மீளாய்வாண்டின் இறுதியில் எஞ்சியிருந்த மருந்துப்பொருட்களின் இருப்பு ரூபா 584,088 ஆக பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் படி உறுதிப்படுத்தப்பட்டிருந்த போதிலும் இது ரூபா 577,056 ஆக நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) 2014 ஆம் ஆண்டின் பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் படி காண்பிக்கப்பட்டிருந்த வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருந்த ரூபா 76,346 பெறுமதியான புத்தகங்கள், நூலகப் புத்தகக் கணக்கிலிருந்து நீக்கப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டிருந்த போதிலும் நானாவித வைப்புக் கணக்கிற்கும் நானாவித வைப்புப் பதிவேட்டிற்கும் இடையே நிலவிய ரூபா 2,302,797 தொகையான வேறுபாட்டிற்கான காரணம் ஆராயப்பட்டு சீராக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) மீளாய்வாண்டின் இறுதியில் பெறுமதி சேர் வரிப் பெறுமதி ரூபா 955,418 ஆக பதிவேட்டின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருந்த போதிலும் இது தவறாக ரூபா 2,199,749 எனக் காணப்பட்டது.

(எ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 52,250 நிலையான சொத்துக்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

**1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

16 கணக்கு விடயங்களுக்குரிய 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களின் படியான மீதிகளிற்கும் பட்டோலைகளின் படியுமான மீதிகளினதும் வேறுபாடு ரூபா 11,986,005 ஆக இருந்தது.

### 1.3.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

2013 ஆம் ஆண்டின் போது உறுப்பினர் ஏற்பாட்டின் கீழ் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்த ரூபா 2,467,708 பெறுமதியான உபகரணங்களும் ரூபா 198,498 பெறுமதியான 03 தொழுவங்களைப் பகிர்ந்தளிக்கையில் தேவைப்பாடு முறையாக இனங்காணப்பட்டு உதவி வழங்கப்பட வேண்டியவர்களுக்கே குறித்த உபகரணங்கள் வழங்கப்பட்டிருந்தமைக்க எவ்வித தகவல்களும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடன் இணக்கமின்மை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாண ஏற்பாடுகள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுக்கு இணக்கமின்மைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டம் 132(ஓ) ஆம் பிரிவு | விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரமின்றி நலன்புரி மற்றும் மரண உதவிச் சங்கம் போன்ற சங்கத்தின் கூட்டுத்தொகை ரூபா 375,495 பெறுமதியான பொருட்கள் உறுப்பினரின் ஏற்பாட்டின் கீழ் சபை நிதியத்தின் செலவினம் ஏற்கப்பட்டிருந்தது. |
| (ஆ) இலங்கைக் குடியரசின் 2005 யூன் 08 ஆம் திகதிய 1396/18 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட விதிகள் | சபைக் கூட்டங்கள் மற்றும் சபைக் கூட்டங்களில் கலந்துகொண்டிராத 14 உறுப்பினர்களுக்காக ரூபா 180,000 தொகையான அங்கத்துவக் கட்டணம் செலுத்தப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| (இ) | உள்ளூராட்சி ஆணையாளர் நாயகத்தின் 2002 ஏப்ரல் 30 ஆம் திகதிய ப.பா.கொ ஏ./03/(1) ஆம் இலக்க சுற்றறிக்கைக் கடிதம் | சப்ரகமுவ மாகாண சபையின் பலவின்ன கொங்கிரீட் தொழிற்சாலையின் உற்பத்தி தரத்தில் உயர்ந்ததெனவும் பலவின்ன கொங்கிரீட் பிரிவின் மூலம் மாத்திரம் ஹியூம் குழாய்களின் கொள்வனவு மேற்கொள்ளப்பட வேண்டியதாகக் காண்பிக்கப்பட்டிருக்கையில் இதற்கு முரணாக கடுவல பிரதேசத்தில் உள்ள தனியார் நிறுவகத்தின் மூலம் 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 166,200 பெறுமதியான 18 ஹியூம் குழாய்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. |
| | 2009 திசெம்பர் 22 ஆம் திகதிய ப.பா.கொ.1/2009 (திருத்தம்) ஆம் சுற்றறிக்கையின் இரண்டாம் பந்தி | உள்ளூராட்சி நிறுவக உறுப்பினர்களுக்காக இணைந்த படிப்பணக் கொடுப்பனவு தொடர்பாகத் தொடர்புபடுத்தப்பட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் போக்குவரத்துக் கட்டணமும் கூட்டிணைந்த திட்டமும் பெற்றுக்கொள்ளப்படுவதற்கு குறித்த உள்ளூராட்சி நிறுவகத்தின் நிர்வாக நடவடிக்கைகளுக்கு நேரடியாக தொடர்புபடாத மற்றும் அதிகாரப் பிரதேசத்திற்கு வெளியில் உத்தியோகபூர்வ நடவடிக்கைகள் அல்லாத பயணங்களுக்காகவேனும் அவ் ஏற்பாடுகளுக்கு மாறாக 2014 ஆம் ஆண்டின் இணைந்த படிப்பணமாக ரூபா 69,000 தொகைக்காக நிதியத்திலிருந்து உறுப்பினர்களுக்குச் செலுத்தப்பட்டிருந்தது. . |
| (இ) | இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணம்<br>---------------------------------------- | |
| (i) | நிதிப்பிரமாணம் 396(ஈ) | காசோலை விநியோகிக்கப்பட்ட நாள் முதல் 06 மாதங்களுக்கு மேற்பட்ட காலமாக காசாக்கப்பட்டிராத காசோலைகள் தொடர்பாக செயற்பட வேண்டிய விதம் தெளிவாகக் |

காண்பிக்கப்பட்டிருக்கையில் 2014 நவம்பர் மாத வங்கிக் கணக்கிணக்கக் கூற்றின் படி ரூபா 726,812 பெறுமதியான 127 காசோலைகள் தொடர்பாக தொடர்புபடுத்தப்பட்ட நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| | | |
|---|---|---|
| (ii) | நிதிப் பிரமாணம் இல. 1645 | சபையின் எந்த வாகனத்தினதும் நாளாந்த ஓட்ட அட்டவணைகள் பல வருட காலமாக கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் படி, 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டெழும் செலவினத்திற்கு மேலான செயற்பாட்டுச் செலவினம் ரூபா 3,067,093 தொகையானதுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்திற்கு மேலான செயற்பாட்டுச் செலவினம் ரூபா 1,522,907 ஆகும்.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் செயற்பாட்டுச் செலவினம் ரூபா 1,544,186 தொகை அதிகரித்திருந்ததுடன் இது 101 சதவீதமான அதிகரிப்பென்பது அவதானிக்கப்பட்டது. இதற்கு முக்கியமாக கடந்த ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் வாடகை, சேவைகளுக்கான கட்டணம், ஆணைச்சீட்டுக் கட்டணம் மற்றும் தண்டப்பணம், ஏனைய வருமானங்கள் மற்றும் அரசாங்கப் பங்களிப்புத் தொகைகள் முறையே 10 சதவீதம், 45 சதவீதம், 43 சதவீதம், 31 சதவீதம் மற்றும் 63 சதவீதத்தால் அதிகரித்தமையும் திட்டமிடலும் உபகரணங்கள், போக்குவரத்துத் தொடர்பாடல்களில் முறையே 02 சதவீதத்தாலும் 19 சதவீதத்தாலும் குறைவடைந்தமையும் தாக்கமளித்திருந்தது.

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டிற்கு உரித்தாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|
| | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| வீதவரியும் வரியும் | 6,375 | 7,366 | 10,012 |
| வாடகை | 4,685 | 4,496 | 1,893 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 876 | 522 | 38 |
| ஏனைய வருமானம் | 13,569 | 13,348 | 10,489 |

### 2.3.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

மீளாய்வாண்டில் வீதவரியும் வரியும், வாடகை வருமானம், அனுமதிப்பத்திரக் கட்டணம் மற்றும் ஆணைச்சீட்டு மற்றும் தண்டப்பண மதிப்பிடப்பட்ட வருமானத்தைச் சேகரித்த வருமானத்துடன் ஒப்பிடுகையில் சேகரிக்கப்பட்ட வருமானம் மதிப்பிடப்பட்ட அளவைப் பார்க்கிலும் முறையே 9 சதவீதம், 3 சதவீதம், 39 சதவீதம் மற்றும் 37 சதவீதமான குறைவைக் காட்டியது.

### 2.3.3 வீதவரி

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கணக்காய்வுப் பரிசோதனைச் சந்தர்ப்பத்தின் போது 2015 மார்ச் மாதம் வரையிலும் மீளாய்வாண்டிற்கு உரித்தான 301

வரிசெலுத்துனர்களிடமிருந்து ரூபா 91,903 தொகையான ஏக்கர் வரியை அறவிடுவதற்கு இருந்ததுடன் ரூபா 1,000 இற்கு மேற்பட்ட நிலுவைத் தொகை அறவிடப்பட வேண்டியிருந்த 18 பேரிடமிருந்து ரூபா 31,574 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது.

(ஆ) சபை எல்லைக்குள் 6700 வீதவரி நிலவியதுடன் அவற்றில் 2014 ஆம் ஆண்டிற்கு உரித்தான நிலுவை வீதவரி தொடர்பான அறிக்கை கணக்காய்வுத் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிராததுடன் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒரு அலகிலிருந்து ரூபா 1,000 இற்கு கூடுதலான நிலுவைத் தொகை ரூபா 5,465,621 ஆகக் காணப்பட்டது.

## 2.3.4 வாடகை

------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபைக்குரித்தான வியாபாரத் தொகுதிகளின் கடைகளில் கணக்காய்வுப் பரிசோதனைகளான 2015 மார்ச் மாதம் வரையிலும் மீளாய்வாண்டிற்குரித்தாக ரூபா 586,182 தொகையான நிலுவைத் தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது.

(ஆ) உள்ளூராட்சி ஆணையாளரின் 2006 மார்ச் 09 ஆம் திகதிய இல. பா.பா.கொ/2009 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் உட்பட்ட தரப்பினர் 05 ஆண்டுகளுக்கு ஒரு முறையேனும் மதிப்பிடப்பட்ட வாடகை திருத்தப்பட வேண்டிய போதிலும் சபைக்குரித்தான 71 கடைகள் தொடர்பான கட்டணத்தை நாளதுவரையாக்காமையும், காலாவதியாகியுள்ள உடன்படிக்கைகளை நாளதுவரையாக்காமையும், மாவட்டத்தின் பிரதான வியாபார நிலையம் உள்ள இக் கடைகளிலிருந்து தற்போதைய சந்தை விலைகளை ஒப்பிடுகையில் ஒப்பீட்டு ரீதியாகக குறைந்த வாடகை அறவிடப்படுவதும் அவதானிக்கப்பட்டது.

## 2.3.5 ஏனைய வருமானம்

-------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பிரதேச சபை அதிகார எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள தொழிற்சாலை வரி, வியாபார வரி மற்றும் வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவிடப்பட வேண்டிய வியாபாரங்களை இனங்காண்பதற்காக வருடாந்த மெய்மையாய்வு கணக்காய்வுப் பரிசோதனைச் சந்தர்ப்பமான 2015 மார்ச் மாதம் வரையிலும் மேற்கொள்ளப்பட்டிராமையால் 2014 ஆம் ஆண்டிற்கு உரித்தாக பல்வேறு நிறுவகங்களால் ரூபா 63,600 தொகையான வியாபார வரி சபைக்குக் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

(ஆ) சபையின் மூலம் கட்டுப்படுத்தப்படும் கட்டஹெத்த நீர் திட்ட முறையில் 31 நீர்ப் பயன்பாட்டாளர்களால் ரூபா 33,852 தொகையான நிலுவைத் தொகை 2015 யூன் வரையிலும் அறவிடப்பட வேண்டியிருந்தது.

(இ) சபைக்குரித்தான கழிவறையை மூன்று மாத கால எல்லைக்குரித்தாக குத்தகைக்கு வழங்கப்படுவதுடன் இதன் படி குறித்த குத்தகையாளரால் ரூபா 17,917 தொகையான நீர்ப்பட்டியலுக்காக நிலுவைத் தொகையும் கணக்காய்வுத் தினமான 2015 மார்ச் 19 ஆம் திகதி வரையிலும் அறவிடப்பட வேண்டியிருந்தது.

## 2.3.6 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

---------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இரத்தினபுரி மற்றும் அவிசாவளை நீதவான் நீதிமன்றத்தால் பெறவேண்டிய நீதிமன்றத் தண்டப் பண வருமானத்தை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் அவிசாவளை நீதவான் நீதிமன்றத்தின் மூலம் 2013 திசெம்பர் வரை பெறப்பட்டிருந்த ரூபா 2,890,867 தொகையான பணமும் இரத்தினபுரி நீதவான் நீதிமன்றத்தால் 2012 சனவரி மாதம் வரை கிடைத்திருந்த ரூபா 290,008 தொகையான பணம் மாத்திரம் பதிவுசெய்யப்பட்டிருந்தன.

(ஆ) இரத்தினபுரி காணிப் பதிவாளர் அலுவலகத்திலிருந்து கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணம் 2014 ஏப்ரல் முதல் அவிஸ்ஸாவளை காணிப் பதிவாளர் அலுவலகத்திலிருந்து பெற வேண்டிய முத்திரைக் கட்டணம் 2013 சனவரி மாதத்திலிருந்தும் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 வெளிநாட்டுப் பயணச் செலவினங்கள்

(i) தனியார் நிறுவகம் ஒன்றால் 2014 நவம்பர் 10 முதல் முதல் 2014 நவம்பர் 15 ஆம் திகதி வரை தாய்லாந்தில் நடாத்தப்பட்ட குப்பை முகாமைத்துவம் தொடர்பான பயிற்சிச் செயலமர்வில் கலந்துகொண்ட 15 அங்கத்தவர்களுக்காக ஆளுநரின் முன்னங்கீகாரம் இன்றி அமையப் படிப்பணமாகவும் இணைந்த படிப்பணமாகவும் ரூபா 1,999,590 கூட்டுத்தொகை பயிற்சி நிலையத்திற்கு ரூபா 1,479,000 தொகையுமாக ரூபா 3,478,590 கூட்டுத்தொகை சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது.

(ii) உள்ளூராட்சி உத்தியோகத்தர் அல்லது உறுப்பினர் வெளிநாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்திற்காகத் தேர்ந்தெடுக்கப்படுவதாயின் நிகழ்ச்சித்திட்டத்தை ஒழுங்குபடுத்தும் நிறுவகம் இதற்காகச் செலவிடும் சகல செலவினங்களையும் ஏற்க வேண்டும் என மாகாண, உள்ளூராட்சி அமைச்சுச் செயலாளர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருக்கையில் விமானப் பயணச்சீட்டுக் கட்டணம், ஹொட்டேல் தங்குமிட வசதிகள், உணவு மற்றும் விமான வசதிகளுக்காக தலைவருக்காக ரூபா 98,600 தொகை சபை நிதியத்திலிருந்து ஏற்கப்பட்டிருந்த போதிலும் மீள இணைந்த படிப்பணமாக நாளொன்றிற்கு அ.டொ. 250 படி 06 நாட்களுக்காக இலங்கைப் பணத்தில் ரூபா 194,250 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(iii) வெளிநாட்டுப் பயிற்சியின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட அறிவு உள்நாட்டு ரீதியாகப் பயன்படுத்தப்படும் விதம் தொடர்பான ஓர் அறிக்கை பயிற்சி முடிவுற்று ஒரு மாத காலத்திற்குள் வழங்கப்பட வேண்டிய போதிலும் மேற்குறித்த வெளிநாட்டுப் பயணம் முடிவுற்று

அறிக்கைத் திகதி வரை 05 மாதங்களுக்கு அண்மித்த காலம் கடந்திருந்த போதிலும் அத்தகைய ஆவணம் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) சனாதிபதி செயலாளரின் 2012 யூன் மாதம் 11 ஆம் திகதிய CSA1/1/16 ஆம் இலக்க சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டவாறு தனிப்பட்ட ரீதியாக மேற்கொள்ளப்பட்ட அழைப்பில் வெளிநாட்டு புலமைப்பரிசில் மற்றும் ஏனைய நிகழ்ச்சித்திட்டத்திற்காக கோரிக்கைகள் விடுத்தலாகாதென அறிவித்திருக்கையில் மேற்குறித்த வெளிநாட்டுச் சுற்றுப்பயணம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

### 3.2 தெருக்களை ஒளியூட்டல்

-----------------------------------

i. தெரு விளக்குகள் பொருத்தப்பட வேண்டிய இடங்களை முறைப்படி இனங்காண்பதற்காக பிரதேசத்தில் ஆய்வொன்றை மேற்கொண்டிராததுடன், வினைத்திறன் தொடர்பாக கருத்திற்கொள்ளாது பிரதேச சபை தொழில்நுட்ப உத்தியோகத்தரின் முன் அங்கீகாரம் இன்றி ரூபா 1,526,950 பெறுமதியான தெரு விளக்குகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

ii. மின்சக்தி மற்றும் மின்வலு அமைச்சுச் செயலாளரின் 2010 ஆகஸ்ட் 17 ஆம் திகதிய சுற்றறிக்கையின் மூலம் தெருக்களை ஒளியூட்டல் தொடர்பாக மேற்கொள்ளப்படும் ஆலோசனைகள் தொடர்பாக கருத்திற்கொள்ளப்படாது தெருக்களை ஒளியூட்டல் செயற்படுத்தப்படுவதுடன் தெருவிளக்குகளைப் பொருத்தவதற்காக இலங்கை மின்சார சபையுடன் ஏற்படுத்தப்பட்ட உடன்பாடுகளும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 செயற்பாட்டுத் திறமையீனங்கள்

----------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபை எல்லைக்குள் உள்ள மயானங்களில் 22 மயானங்கள் மாத்திரம் இனங்காணப்பட்டிருந்த போதிலும் அவை அளவீட்டு

நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு சபைக்கு முறைப்படி பொறுப்பேற்கப்பட்டு பதியப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபைப் பதிவேட்டின் படி, சேவையை விட்டு விலகிச் செல்லல் அல்லது இடமாற்றம் பெற்றுச் சென்றதன் காரணமாக 09 உத்தியோகத்தர்களாலும் ஊழியர்களாலும் ரூபா 63,583 கூட்டுத்தொகையான நிலுவைக் கடன் மீதி சபை நிதியத்திற்கு அறவிடப்பட வேண்டியிருந்தது.

(இ) பல்வேறு செயற்பாடுகளுக்காக சபையால் ரூபா 5,148,828 தொகையான வைப்புக்கள் தொகை 27 ஆண்டுகளாக வைத்துக்கொள்ளப்பட்டிருந்ததுடன் அவை முறையான வகையில் விடுவிக்கப்படுவதற்கோ அல்லது அரசாங்க வருமானத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சபையிலிருந்து ஓய்வு பெற்றுச் சென்ற அல்லது இடமாற்றம் பெற்றுச்சென்ற உத்தியோகத்தர்களுக்காக உள்ளூராட்சி சேவைகள் ஓய்வூதிய நிதியத்திற்குப் பங்களிப்புத் தொகையாக ஓய்வூதியத் திணைக்களத்திற்கு 2014 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் செலுத்தப்பட வேண்டியிருந்த ரூபா 133,385 தொகையில் மீளாய்வாண்டின் போது ரூபா 25,000 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும் அவ் உத்தியோகத்தர்களின் சேவைக் காலம், தற்போது கடமையாற்றும் இடங்கள் அல்லது முகவரிகள் குறித்த உத்தியோகத்தர் உயிருடன் உள்ளாரா என்பது குறித்து எவ்வித தகவல்களும் பெற்றுக்கொள்ளாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(உ) 2012 சனவரி மாதம் முதல் வங்கிக் கணக்கிணக்கக் கூற்றில் நிலவிய ரூபா 12,140 தொகையான வேறுபாடு இனங்காணப்பட்டு தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.4 விளைவற்ற/ குறைவான பயன்பாடுடைய சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையிடம் உள்ள கெட்டஹெத்த பல்தொழில் கட்டிடம் கணக்காய்வுத் தினம் வரையிலும் எவ்வித பயன்பாட்டு நடவடிக்கைகளுக்கும் எடுத்துக்கொள்ளப்பட்டிராத காரணத்தால் சபைக்குக் கிடைக்கப் பெறக்கூடிய வருமான மார்க்கம் கிடைக்கப்பெறாது போயிற்று.

(ஆ) சபைக்கு வேறு அமைச்சிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட 02 வாகனங்கள் தொடர்பில் சபையின் தேவைப்பாடுகளுக்கு பொருந்தாமை மற்றும் சாரதிகள் இன்மையால் கணாக்காய்வுச் சந்தர்ப்பமான 2015 பெப்ரவரி மாதம் வரையிலும் எவ்வித பயன்பாடும் இன்றி நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததுடன் அவை நிலையான சொத்துப் பதிவேட்டிலும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.5 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலுக்பிட்டிய தெஹிகஹலியெத்த வீதி

உடன்படிக்கையிடப்பட்ட பெறுமதி ரூபா 490,196 தொகையான உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சின் ஏற்பாட்டின் கீழ் செயற்படுத்தப்பட்ட இலக்பிட்டிய தெஹிகஹலியெத்த ஊடாக கங்ஹதரவத்த வீதி அபிவிருத்தி செய்யும் செயற்பாட்டிற்காக 155 கியூப் மீட்டர்களுக்காக ரூபா 309,982 தொகையான கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் பௌதீக ஆய்வின் போது உருளை பயன்படுத்தப்பட்டு வீதியைப் பதனிடும் பணிகள் முறையாக மேற்கொள்ளப்பட்டிராமை கண்டறியப்பட்டது. வயலொன்றை நிரப்பி நிர்மாணிக்கப்பட்ட வீதி ஒன்றை அபிவிருத்தி செய்யும் இச் செயற்பாட்டிற்காக கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் முன்னங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிராமையும் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ஆ) உடைத்து அகற்றப்பட்ட கட்டிடத்தின் குப்பைகளை அகற்றும் செயற்திட்டம்

---

அஹலியகொட நகர அபிவிருத்திச் செயற்திட்டச் செயற்பாட்டின் கீழ் நகரத்தின் வீதிக்கு எல்லையான கட்டிடப் பகுதிகளை அகற்றல்

i. குப்பைகளைத் தேவையான இடங்களிற்குக் கொண்டு செல்லும் போக்குவரத்துச் செலவினங்களைப் பிரதேச சபையினூடாக ஏற்பதற்கும் நகர அபிவிருத்தி அதிகாரசபையினூடாக குறித்த செலவினத்தை மீளளிப்பதற்காகவும் எழுத்துமூல உடன்படிக்கையொன்றை ஏற்படுத்திக்கொள்ளாது குறித்த செயற்திட்டம் செயற்படுத்தப்பட்டிருந்தது.

ii. அஹெலியகொட பொலிஸிற்கு அருகிலிருந்து தலகஹமுல்ல வரை அகற்றப்பட்டிருந்த குப்பைகளை அகற்றுவதற்காகத் தயாரிக்கப்பட்டிருந்த ரூபா 6,277,500 கூட்டுத்தொகையான மதிப்பீடும் போக்குவரத்துச் செலவினமாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த ரூபா 6,274,410 தொகையான பட்டியலிற்காக தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் அல்லது பொறியியலாளரின் பரிந்துரை அல்லது கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

iii. மேற்குறித்த துறைக்காக 2013 ஆம் ஆண்டின் போது முற்பணமாக ரூபா 900,000 தொகையான நிதி ஏற்கப்பட்டிருந்த போதிலும் நகர அபிவிருத்தி அதிகாரசபையினூடாக அப் பணத்தை மீளளிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

iv. குறித்த ஆதனங்களின் உரிமையாளர்களால் அல்லது நகர அபிவிருத்தி அதிகாரசபையினூடாக மேற்கொள்ளப்பட வேண்டிய வேலைப் பகுதி பிரதேச சபை தலையிட்டு மேற்கொள்ளப்பட்டதன் காரணமாகவும் செலவின மதிப்பீடு மேற்கொள்ளப்படுகையில் இதற்காகப் பணம் ஏற்பாடு செய்யப்படுவது தொடர்பாக நிச்சயமான தீர்விற்கு வராமையால் மேற்குறித்த துறைக்காகச் செலவிடப்பட்ட ரூபா 900,000 தொகையான முற்பணம் செலுத்தப்பட்டமைக்கும் செலுத்தப்படுவதற்குள்ள எஞ்சிய பணம் தொடர்பாக பிரதேச சபை நிகழத்தக்க பொறுப்பிற்கு உட்பட்டிருந்தது.

## 4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

---

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிர்வாகம்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(ஈ) ஒப்பந்த நிர்வாகம்